
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1175

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

111

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

# வேலைமுறைகளை மாற்ற வேண்டும்!

*13.2.1944 சென்னை, கோவிந்தப்ப நாயக்கர் தெருவில், 'சென்னை ஜில்லா நீதிக்கட்சி மாநாடு' கூடியது. சௌந்தர்யா மஹாலில், காலை 10 மணிக்கு சி.எம்.சரசுவதி அவர்களின் இன்னிசையுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. நீதிக்கட்சியினர் மட்டுமன்றி, கல்லூரி மாணவர்களும் பொதுமக்களும் ஏராளமானோர் கூடியிருந்தனர். செங்கல்பட்டு ஜில்லா போர்டு தலைவராக இருந்த டி.சண்முகம் வரவேற்புரையாற்றினார்.*

*நீதிக்கட்சியின் தராசு கொடியை ஏற்றி வைத்துப் பேசிய இந்திராணி பாலசுப்ரமணியம், "சமுதாயத் துறையிலும் அரசியல் துறையிலும், உத்தியோகத் துறையிலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த திராவிட இனத்தைக் காக்க காலஞ்சென்ற டாக்டர் நடேச முதலியார் திராவிட சங்கத்தை ஏற்படுத்தினார். அடுத்தாற் போல் நாயர் பெருமானும் தியாகராயரும் 'ஜஸ்டிஸ் இயக்கம்' கண்டார்கள். பெரியார் ராமசாமி தலைவராக வந்த பிற்பாடு, திராவிடர்கள் கண்விழித்து அவரவர் உரிமைகளைக் காப்பாற்றிக்கொள்ள கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். திராவிட மக்கள் மானத்துடன் வாழ இனிமேல் அதற்குரிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளத் தயங்க மாட்டார்கள்" என்றார் அவர்.*

*மாநாட்டைத் திறந்துவைத்துப் பேசிய தந்தை பெரியார், "நாம் கட்சி ஆரம்பித்து 27 வருடங்கள் ஆன பின்பும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்டு கெஞ்சிக்கொண்டே இருக்க வேண்டுமா? காலம் பெரிய மாறுதலடைந்துவிட்டது. அன்பு காட்டுவதை அடிமைத்தனமாகவும், நேர்மையைக் கோழைத் தனமாகவும், ஒழுக்கத்தை - நாணயத்தை*

ஓவியம் : சிகரன்




*முட்டாள்தனமாகவும் கருதும்படியான காலம் இது. நம் கட்சியின் இலட்சியங்களையும் வேலைத்திட்டங்களையும் மாற்ற வேண்டும்" என்று எதிர்காலப் பணிகளை விவரித்தார்.*

*"திராவிடர்கள் என்று உறுதியோடு நம்மை நம்பினோமானால், பின்னர் தமிழ் மொழி, தமிழ் இசை, தாமாகவே வளர்ச்சி பெற்றுவிடும். பழைய நாட்களில் எப்படியோ என்றாலும், இன்று நாம் திராவிடர்கள் என்று சொல்லாவிட்டால் ஆபத்து" என்று கூறி, அறிஞர் அண்ணாவை இந்த மாநாட்டிற்குத் தலைமையேற்குமாறு அழைத்தார் செட்டி நாட்டு குமாரராஜா. பெரியார் மீது அன்றைக்கு விமர்சனக் கணைகளை ஏவியவர்களுக்குப் பதிலடி கொடுத்து, தனது தலைமை உரையை நிகழ்த்தினார் அண்ணா.*

*மதிய உணவுக்குப் பிறகு மீண்டும் மாநாடு கூடியவுடன், மறைந்த தொழிலாளர் தலைவர் சி.பாசுதேவ் படத்தை எஸ்.நடேசனும், சர் ஏ.டி.பன்னீர்செல்வம் படத்தை சௌந்தர்யா அம்மாளும் திறந்துவைத்தனர். டி.பி.வேதாசலம் திராவிட நாட்டுப் படத்தைத் திறந்துவைத்து உரையாற்றினார்.*

*சேலத்தில், விரைவில் நடைபெறவுள்ள மாநாட்டில் 'தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்' என்பதை, 'சென்னை மாகாண திராவிடர் கட்சி' என்று மாற்ற வேண்டும். வகுப்புவாரி பிரதி நிதித்துவத்தைத் திருத்தி 100-க்கு 99 திராவிடர்களுக்கு வழங்க வேண்டும். தொழிலாளர்களின் கூலி விகிதங்களை உயர்த்தி, அவர்கள் முதலாளிகளின் கருவிகள் இல்லை என்ற நிலையை அரசு ஏற்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட 10 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

*அப்போது திடீரென எழுந்து பேசிய நீதிக்கட்சியின் டாக்டர் கிருஷ்ணசாமி, "சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி சில வார்த்தைகள் பேச வேண்டும். அதனால் யார் என்ன நினைத்துக்கொண்டாலும், என் மனதில் உள்ளதைப் பேசித் தீர வேண்டும். சுயமரியாதை இயக்கம், 'ஜஸ்டிஸ் கட்சி'க்குப் பின்னால் இருக்க வேண்டுமே ஒழிய, ஜஸ்டிஸ் கட்சியை ஆதிக்கம் செலுத்திவிடக் கூடாது" என்றார். இதற்கு பெரியார் எழுந்து பதிலளித்தார். ஆனால், அந்தப் பதிலைக் கேட்க காத்திருக்காமலேயே, பேசி முடித்தவுடன் அங்கிருந்து கிளம்பிவிட்டார் டாக்டர் கிருஷ்ணசாமி. பெரியாருக்குப் பிறகு, மீண்டும் அண்ணா சில நிமிடங்கள் பேசினார். இறுதியாக என்.ஜீவரத்தினம் நன்றி கூற, இரவு 8 மணிக்கு மாநாடு முடிவுற்றது.*

**...கூட்டம் திரளும்**

## தமிழ் அறிவுத் துறையினர் பேசட்டும்!

தமிழ் அறிவுத் துறைக்கு, தி.மு.க. செய்துள்ள பணிகளைப் பாராட்ட வேண்டும், பேச வேண்டும் என முகநூலில் கருத்து தெரிவித்துள்ளார் எழுத்தாளர் முருகவேல். அவரது பதிவிலிருந்து…

"தி.மு.க. செய்த ஒரு நல்ல விஷயம், மிகவும் சிறப்பான நூலகங்களை சென்னையிலும் மதுரையிலும் அமைத்தது. கோவையிலும் இப்படியொரு நூலகம் கட்டப்பட்டு வருகிறது. தமிழக நூலகங்கள் பழைய பாணியில் உள்ளன. ஆனால், தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சி மிகப் பெரிய பரிமாணம் எடுத்துவருகிறது. அதற்கு இந்தப் புதிய நூலகங்கள் மிகவும் அவசியமான தேவை. இலக்கிய வளர்ச்சி, மொழிபெயர்ப்பு போன்றவற்றுக்கும் குறிப்பிடத்தக்க முன்னெடுப்புகள், இந்த அரசால் செய்யப்பட்டு வருகின்றன.

சாகித்ய அகாடமி நடத்துவதைப் போன்று அதைவிட பெரிய அளவில் தமிழக அரசால் இலக்கியக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவை இன்னும் முழு வளர்ச்சி பெறவில்லை. இவை சரியான திசையில் செல்லும் என்றால், தமிழ் இலக்கியம் பெரிய அளவுக்குப் பயன்பெறும். அ.தி.மு.க. செய்த மன்னிக்க முடியாத குற்றம், சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தைச் சிதைக்க முயன்றது. அதில் திருமணம் எல்லாம் நடத்தியது. தமிழ்ச் சமூகம் இதை ஒருபோதும் மறக்கவோ, மன்னிக்கவோ கூடாது.

ஒரு நூலகம், சமூகத்துக்கு எவ்வளவு தேவை என்பதை அங்கே திருமணம் நடத்திய அ.தி.மு.க. கோஷ்டிகளுக்குப் புரியவைக்க முடியுமா என்பதே சந்தேகமாக இருக்கிறது.

அ.தி.மு.க., நாம் தமிழர் கட்சிகள் இந்த நூலகங்களை மேலும் வளர்த்து எடுப்போம்; இன்னும் கட்டுவோம் என்று மறந்தும் சொல்வதில்லை. இதெல்லாம் என்ன விதமான மனநிலை என்று புரிந்துகொள்ள முடியவில்லை. சனாதன பி.ஜே.பி.யிடம், நாம் நூலக விஷயங்களை எதிர்பார்க்கவே முடியாது. இந்த முக்கியமான பணி, தி.மு.க.வின் தேர்தல் விளம்பரங்களில் இடம்பெறுவதில்லை. ஆனால், எதிரே நிற்பவர்கள், 'அர்பன் நக்சல்' எனக் குற்றம்சாட்டி அறிவுத் துறையினரை வேட்டையாடக்கூடியவர்கள்.

எனவே, இந்தப் பணிகளைப் பேசுவது என்பது தமிழ் அறிவுத் துறையினர் மேல் பி.ஜே.பி.யும் அதன் அமைப்புகளும் அ.தி.மு.க.வும் தொடுத்த தாக்குதல்களை நினைவுபடுத்துவதாகும்" என்று கூறியுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### புதையலெனப் பாதுகாக்கும் படம்!



வல்லம் தாஜுபால்

3.6.2013 அன்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 90-வது பிறந்த நாளையொட்டி, சென்னை, தாஜ் கோரமண்டல் ஹோட்டலில் 'கலைஞர்-90 கவிஞர்-90' என்ற நிகழ்ச்சியை, கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் நடத்தினார். தமிழ்நாடு முழுதும் 90 கவிஞர்களைத் தேர்ந்தெடுத்து, கலைஞருடன் சந்திப்புக்கும் விருந்துக்கும் ஏற்பாடு செய்திருந்தார். கவிஞர் வாலி, கவிக்கோ அப்துல் ரகுமான் உள்ளிட்ட ஆளுமைகள் பங்கேற்ற அந்த நிகழ்ச்சியில், நானும் பங்கேற்றேன். அப்போது எடுக்கப்பட்டு, நான் புதையலெனப் பாதுகாக்கும் புகைப்படம் இது.

**– கவிஞர் வல்லம் தாஜுபால், தஞ்சாவூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com


## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

111

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# சினிமா நடைபழகிய காலம்!




*1895-இல் பாரிஸில் அறிமுகமான சினிமா, அடுத்த இரண்டாண்டுகளில் மெட்ராஸை வந்தடைந்திருந்தது. தற்போது நாம் நுகரும் சினிமா, காலம்தோறும் எப்படி மாறி மேம்பட்டு வந்துள்ளது என்பதைப் படித்தால் பூரிப்பாக இருக்கிறது.*

*சினிமா மற்றும் நாடகத் துறை தோன்றிய சமயத்திலேயே, திராவிட இயக்கம் அந்தக் கலைத்துறைகளைத் தனது அரசியலுக்கு மூலதனமாக்கிக் கொண்டது என்றுதான் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், தேசிய விடுதலை பற்றிய விழிப்புணர்வுக்காகப் பெரிய அளவில் சினிமாவை, காங்கிரஸ் இயக்கமும் பயன்படுத்தியுள்ளது. அதில் முக்கியத்துவம் வாய்ந்தவராக, காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தியைக் குறிப்பிடலாம். ஆம், காமராஜரை ஆதரித்த அதே சத்யமூர்த்தி தான். South Indian Film Chamber of Commerce-இன் முதல் தலைவராகவும் இவர்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார்.*

*1943-இல் சத்யமூர்த்தி மறைந்த காரணத்தால், சினிமா என்ற துறை காங்கிரஸ் கட்சியினரால் பெரிதும் கவனிக்கப்படாத துறையாகிப் போனது. அவரின் சீடரான காமராஜர், சினிமாக்காரர்களைக் 'கூத்தாடிகள்' என்று சொல்லும் அளவுக்குப் பிற்காலத்தில் சினிமா எதிர்மறையாக அணுகப்பட்டது.*

*திராவிட இயக்கம், வெகுமக்களை அரசியல்படுத்த சினிமா எத்தகைய கருவியாகப் பயன்பட்டுள்ளது என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை. தமிழ்நாட்டு அரசியலும் சினிமாவும் நெருக்கமாக இருப்பதற்கு, வரலாற்றுக் காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அது நூற்றாண்டு வழமையைக் கொண்ட வரலாறாக இருக்கிறது. அதன் ஒரு பகுதியை, நமக்குத் தரவுகளுடன் வழங்கும் நூல்தான் ஆய்வாளர் தியோடர் பாஸ்கரன் எழுதியிருக்கும் 'The Eye of the Serpent: An Introduction to Tamil Cinema' எனும் நூல். தமிழிலும் வாசிக்கக் கிடைக்கிறது.*

*ஊமைப் படங்களும் அதைத் தொடர்ந்து வெளியான தொடக்கக்கால ஒலிப் படங்களும் பதிவுகளாக இன்றைக்கு நம்மிடம் இல்லை என்பது வருத்தத்திற்குரிய செய்தி. இரண்டாம் உலகப்போர் சமயத்தில், மக்களிடம் போருக்கு ஆதரவான மனநிலையை ஏற்படுத்தும் விதமான திரைப்படங்களைத் தயாரிக்கவும் பிரிட்டிஷ் அரசாங்கம் நிதிஉதவி வழங்கியுள்ளது. அதே பிரிட்டிஷ் அரசாங்கம், விடுதலை எழுச்சியைப் பிரகடனம் செய்யும் திரைப்படங்களைத் தடைசெய்தும் உள்ளது. ஊமைப் படங்கள், அதைத் தொடர்ந்து வெளியான ஒலி கோர்க்கப்பட்ட சினிமா, பாடல்கள், வசனம், இந்த நிலத்தின் அரசியலோடு அது பொருந்தி வந்த விதம், இவை எல்லாம் இந்த நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

*குறிப்பாக, ஊமைப் படங்கள் தொடங்கி, ஒலி பொருத்தப்பட்ட சினிமா வரை 40-க்கும் மேற்பட்ட ஆரம்பக்கால திரைப்படக் குறிப்புகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. திரைப்பட இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், பாடலாசிரியர்கள், வசனகர்த்தாக்கள் எனப் பல ஆளுமைகளின் அரிய குறிப்புகள் இந்நூலில் அடங்கும். ஒரு சிறந்த ஆய்வு நூல். தமிழ் சினிமா பற்றி அறிய விருப்பமுள்ளவர்களுக்கு மிகச்சிறந்த கையேடு.*

*சினிமாவும் அரசியலும் தமிழ்ச் சமூகத்தில் ஒன்றிணையத் தொடங்கிய ஆரம்பப் புள்ளியை அடையாளம் காட்டும் இந்நூல், அனைவராலும் அவசியம் வாசிக்கப்பட வேண்டிய ஒன்று.*

**...வாசிப்போம்.**

## ம்லவூருக

### குலக்கல்விப் போராட்டம்!

1952-ஆம் ஆண்டு, திருவான்மியூர் சலவைத் தொழிலாளர் மாநாட்டில் பேசிய அன்றைய முதலமைச்சர் ராஜாஜி, "எல்லா சாதியினரும் படிக்க வேண்டும் என்றால், அத்தனை பேருக்கும் வேலை எங்கே இருக்கிறது? எனவே, அவரவர் சாதித் தொழிலைச் செய்ய வேண்டும்" என்றார். 'ஆறு வயது முதல் 11 வயது வரை பள்ளியில் படிக்கும் சிறார்கள், பாதி நாள் பெற்றோர் தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டும்' என உத்தரவிட்டார். இந்த முடிவுக்கு எதிராக, நடைபெற்ற மும்முனைப் போராட்டத்தில், ராஜாஜி வீடு முற்றுகைப் போராட்டம், 15 நாட்களுக்கு மேல் வீரியமாக நடைபெற்றது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900